IN THE COURT OF III ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

S.C.No. 369 of 2023

Deposition of witness for

PW 11 (LW 13)

Name : Thiru. Ponnusamy

Father's Name : Periyasamy

Designation : Inspector Gr-II, Regional Transport Office, Chennai North East, Chennai - 81.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of December 2025 .

16.12.2025

PW11 முதல் விசாரணை

சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

எதிரி ராஜி ஆஜர்

நான் தற்பொழுது சென்னை வடகிழக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை இரண்டாக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 20.01.2023 அன்று நான் அலுவலகத்தில் இருந்த பொழுது H1 போக்குவரத்து புலனாய்வு காவல் ஆய்வாளர் அவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் குற்ற எண்.6/H13 2023 என்ற சம்பந்தப்பட்டிருந்த வாகனம் டிஎன் TN 03X5063 என்ற பஜாஜ் ஆட்டோ ரிக்ஷாவை ஆய்வுக்கு உட்படுத்தினேன். ஆய்வில் வாகன வாகனத்தில் காப்பீடு நடப்பில் இல்லை அது மட்டும் அல்லாமல் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. இதன் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சோதனை அறிக்கை வழங்கப்பட்டு இணக்க கட்டணம் 7000 வசூலிக்கப்பட்டது.

என்னால் வழங்கப்பட்ட ரசீது அ.த.சா.ஆ.**9**. வாகனத்தில் உள்ள சேதாரங்களை ஆய்வு செய்த பொழுது வாகனத்தின் முன்பக்க காற்று தடை கண்ணாடி உடைபட்டு இருந்தது. மேலும் வாகனத்தின் விபத்தானது வாகன இயந்திர கோளாறு காரணமாக ஏற்படவில்லை என்று என்னுடைய கருத்தினை பதிவு செய்து வாகன விபத்து அறிக்கையை சமர்ப்பித்தேன். என்னால் அளிக்கப்பட்ட வாகன விபத்து அறிக்கை அ.த.சா.ஆ.**10**. சம்பவ தினத்தன்று மேற்படி வாகனத்தை ஓட்டிய ஓட்டுனர் பெயர் ராஜி, தகப்பனார் பெயர் ஏழுமலை. மேற்படி வாகனத்தின் உரிமையாளர் மணிமேகலை, கணவர் பெயர் ராஜி. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்.

<u>குறுக்கு விசாரணை</u> – இல்லை.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

16.12.2025

III Addl. Sessions Judge.
III Addl. Court.